1989 நவம்பர் 1] (திரு. மா. சுந்தரதாஸ்)

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 மற்றும் 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 38/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2—11—1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

168. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப்பாய (நிதி மற்றும் நிருவாக அதிகாரங்கள்) விதிகளை வகுப்பது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தம் துறையின் 1989 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப் பாயச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 13/1985) 37(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

[1989 நவம்பர் 1

169. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது பானங்களுக்கு விதிக்கக்கூடிய 30 சதவீத வரியினை 20 சதவீதமாக குறைத்து வரி விதிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் நாளிட்ட 398 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

170. மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதி பராசக்தி ஆலயத்தை பொறுத்தமட்டில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் சில வழிவகைகளிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1989 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 24 ஆம் நாளிட்ட 39432/க்யூ 1/89 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

171. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 19 ஆம் நாளிட்ட 642 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

172. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 1989 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 27 ஆம் நாளிட்ட 873 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

173. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண் வருமான வரி (மேல் முறையீடு மற்றும் சீராய்வு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1988 ஆம் ஆண்டு மே

1989 நவம்பர் 1]

திங்கள் 31 ஆம் நாளிட்ட 975 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண் வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

174. தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தின் 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் முடியவுள்ள காலவரைக்கான ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

175. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

176. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

177. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

178. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான நிருவாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

179. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிருவாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1989 நவம்பர் 1

180. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான நிருவாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

181. தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

182. சென்னை மாநகர், மெரினாவில் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாள் அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து நீதிபதி திரு. பி. கே. சேதுராமன் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

22. பொது நிறுவனங்கள் குழுவின் இருபது முதல் முப்பத்தி மூன்று வரையிலான அறிக்கைகள் (1989-90).

23. அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை (1989-90).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS